# மாலைப் பொழுதின் மயக்கத்திலே...



கோவை ராஜலட்சுமி ஃபைன் ஆர்ட்ஸ் நடத்திய செப்டம்பர் இசை விழாவின் நிறைவு நாள். பிரபல கர்நாடக இசைப் பாடகி சுதா ரகுநாதனின் கச்சேரி.

சுதாவின் இசையால் மனமும், அழகால் பார்வையும் நிறைந்துவிடுகிறது. இரண்டு மணி நேரக் கச்சேரி. ரசிகர்கள் இருக்கையைவிட்டு அசையவில்லை. எழுந்துபோனால், இடம் கிடைக்காது என்ற பயம். தியாகய்யரும், தீட்சிதரும், ஊத்துக்காட்டாரும் அரங்கை ஆக்கிரமித்தனர். நிகழ்ச்சி முடிந்தபின்னும் நெஞ்சைவிட்டு அகலாத மதுரக்குரல். அதிகம் பேசாத இந்தக் குயில், 'கொண்டாட்டத்துக்காக' அளித்த 'கலகல' பேட்டி:

**கச்சேரிகள்ல புதுப் புது பாடல்களைப் பாட, யாரிடமாவது பயிற்சி எடுத்துக் கொள்கிறீர்களா?.**

நிறைய சி.டி., கேசட்டுகள் வந்திருச்சு. புத்தகங்கள் மூலமாவும், ஏற்கெனவே பாடப்பட்டு ஆவணங்களா இருக்கற ரெகார்ட்ஸ் வழியாவும் நிறையப் பாடல்களைக் கேட்டு பிராக்டீஸ் செய்யறேன். பழைய பாடல்களுக்குப் புதுவடிவம் கொடுத்து பாடறேன்.

**உங்களுக்குப் பிடித்த கர்நாடக இசைப் பாடகர், பாடகி யார்? (உங்க குரு எம்.எல்.வசந்தகுமாரி நீங்கலாக). திரைப்படப் பாடகர், பாடகி யார்?**

எம்.எஸ். அம்மா பாட்டுன்னா, எனக்கு உயிர். அவங்க குரல்ல வெளிப்படற பக்திப் பரவசம், ஞானம், இனிமை, அர்ப்பணிப்பு உணர்வு... எதிராளிங்க மனசைத் தொடும்.

இப்ப பாடறவங்க ஒவ்வொருத்தரோட குரலும் ஒவ்வொரு வகையில என்னைக் கவர்றது. ஒவ்வொருத்தர் கிட்டயும் ஒவ்வொரு ஸ்பெஷல் இருக்குது. திரைப்படப் பாடகர்ல எஸ்.பி.பி., ஹரிகரன், சங்கர்மகாதேவன் குரல்கள் பிடிக்கும். சித்ரா, சுசீலாம்மா பாட்டுகள்னா ரொம்ப இஷ்டம்.

**உங்க அழகின் ரகசியம்...?**

யோகா, உடற்பயிற்சிகள், தியானம் செய்வேன். வயசாகறதை யாராலும் தடுக்க முடியாது. ஆனால் ஆரோக்கியமாக நம்மள வெச்சுக்க முயற்சிக்கிறது தப்பில்லையே. நிறையக் கச்சேரிகள்ல பாடறதால, நமக்குனு பிரத்தியேகமாக ஏதாவது வேணும்னு தோணுச்சு. யோகா, தியானத்துல ஈடுபாடு வந்தது. சாப்பாட்டு விஷயத்துல நான் எப்பவுமே கட்டுப்பாடா இருப்பேன். உணவுப் பதார்த்தங்கள்ல அதிக ஆர்வம் இருந்ததில்லை. சாப்பாட்டைக் குறைச்சாலே, உடம்பில இருக்கற வேண்டாத கொழுப்புகள் கரைஞ்சு, முகத்துல ஒரு தேஜஸ் பிறக்கும். எப்பவுமே சிரிச்சிட்டு இருக்கறது என்னோட பிளஸ் பாயிண்ட்.

'சுதா பிராண்ட் சிரிப்புனு'கூட சொல்வாங்க. மன அழுத்தம், கோபதாபங்களைக் குறைக்க சிரிப்பு உதவுது. இறுகின முக தசைகளைத் தளர்த்தவும், மனசைச் சுத்தமா வச்சுக்கவும் சிரிப்பு நல்ல ஆயுதம். ஆனால், என் சிரிப்புல எப்பவும் பொய்மை இருந்ததில்லை.

**கச்சேரிக்கு முன்னாடி நீங்க கடைப்பிடிக்கற பழக்கம்? குரல் வளப் பாதுகாப்புக்கு எடுத்துக்கற முயற்சி...?**

கச்சேரி இருக்கற நாள்ல அதிகம் பேசமாட்டேன். கச்சேரி துவங்கறதுக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னாலதான் பேச ஆரம்பிப்பேன். தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்களுக்குக் கச்சேரி இருந்துனா, பேசவே மாட்டேன். மௌனம்தான். மனதை உள்நோக்கி கொண்டு போக மௌனம் மிகச் சிறந்த வழி. மௌனமா இருக்கும்போது தியான நிலையில் மனசு இருக்கும். சங்கீதம் பற்றி சிந்திக்க ஏற்ற தருணம் அது. ஒவ்வொரு கச்சேரிக்கும் ஐந்தாறு மாசத்துக்கு முன்னமே தேதி கொடுக்க வேண்டியிருக்கு. தொடர்ந்து கச்சேரிகள் செய்யும்போது, குரல் கரகரப்பா இருக்கறதுபோலத் தோணினா, அதிகம் பேச மாட்டேன். நிறைய வெந்நீர் குடிப்பேன். அதிக புளிப்பு, இனிப்பு, குளிர்ந்த உணவுகளைத் தவிர்த்திடுவேன்.

**உங்களுக்குப் பிடிச்ச நாடு எது?**

கச்சேரிக்காகவும், என் குடும்பத்தோடயும் நிறைய நாடுகளுக்குப் போயிருக்கேன். ஹவாய் எனக்கு மிகவும் பிடிச்ச இடம். ஜனத்தொகை குறைவுங்கறதால, பச்சைப் பசேல்னு தொடச்சுவிட்டமாதிரி படு சுத்தமான நாடு. பளபளன்னு சுத்தமான தண்ணீர். கையில மணலை அள்ளினா, ஜிகுஜிகுனு பட்டுப்போல உதிரும். ஆஸ்திரேலியாவுல கேன்ஸ் நகரத்துல விளையாடின தண்ணீர் கேம்ஸை மறக்கவே முடியாது. ஸ்விஸ்ல ஆல்ப்ஸ் மலை மேலே ஐஸைக் கொண்டு வீடு கட்டி விளையாடினதும் அற்புதமான அனுபவம்.

**திரைப்படங்கள்ல அதிகம் பாடாதது ஏன்?**

இதுவரைக்கும் நாலைந்து படங்கள்ல பாடியிருக்கறேன். கச்சேரி இருந்ததால பல பாடல்களை ஒத்துக்க முடியல. 'உளியின் ஓசை' படத்தில நான் பாடிய பாடல் சி.டி.ல இருக்குது. ஆனா, படத்தில வரல. கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்ட பாடல்களை மட்டுமே பாடறதால, திரைப்படங்கள்ல என் பாடல்கள் அதிகம் எடுபடலைனு நினைக்கிறேன். சாஸ்திரிய இசையை ரசிக்கறவங்க மட்டும்தான் அதை ரசிப்பாங்க. சமீபத்துல 'வாரணம் ஆயிரம்' படத்துக்காகப் பாடியிருக்கறேன்.

**உங்களுக்குப் பிடித்த உடை, நிறம்..?**

பிடித்த உடை சேலைதான். அப்புறம் சல்வார். எல்லா நிறமும் பிடிக்கும். மூடுக்குத் தகுந்தாற்போல கலர் செலக்ஷன் இருக்கும். சந்தோஷமான மனநிலையில இருந்தா, நல்ல பிரைட் கலர் சேலை கட்டுவேன். அமைதியான மகிழ்ச்சினா... வெண்மைதான் என் சாய்ஸ். பச்சை நிறப் பட்டு கட்டினா, பளிச்னு தெரியும். சிவப்பு, மெஜந்தா புடவையில நான் மங்களகரமா இருக்கறதா வீட்ல சொல்வாங்க. கருப்பு நிறத்துலகூட ஒரு கம்பீரம் இருக்கும். ஸோ, எல்லா நிறமும் என் ஃபேவரைட்தான்.

**இசை தவிர, வேறு ஹாபி...?**

ஒவ்வொரு நாட்டுக்குப் போகும்போதும் அங்க கிடைக்கிற பொம்மைகளை வாங்கிட்டு வந்து சேகரிச்சு வச்சுக்கறது வழக்கம். என்கிட்ட நூற்றுக்கணக்கான பொம்மைகள் இருக்குது. ஒவ்வொரு நாட்டோட புகழ்பெற்ற சின்னங்கள் பொறிக்கப்பட்ட கீ செயின்கள், விதவிதமான பிள்ளையார் சிலைகளைச் சேகரிச்சுட்டு வர்றேன்.

நிறைய புக்ஸ் படிப்பேன். குறிப்பா, தன்னம்பிக்கை, சுயமுன்னேற்ற நூல்கள் பிடிக்கும். கிரைம், திரில்லர் நாவல்களும் விரும்பிப் படிப்பேன்.

**மறக்க முடியாத கச்சேரி...?**

1990 அக்டோபர்ல என் குரு எம்.எல்.வி. காலமானாங்க. அந்த வருஷம் டிசம்பர் சீசன்ல நான் மியூஸிக் அகாதமியில பாடின கச்சேரியை இப்ப நினைச்சாலும் உடல் சிலிர்க்குது. அப்ப நான் 8 மாச கர்ப்பிணி. எம்.எல்.வி. இறந்த உடனே நடந்த சீசன்கறதால, என்கிட்ட ரசிகர்கள் நிறைய எதிர்பார்ப்போட இருந்தாங்க. 'இவ எப்படிப் பாடுவா...எம்எல்வி பெயரை காப்பாத்துவாளாங்கற' பேச்சு இருந்தது. அந்தக் கச்சேரியில நிறைஞ்சு வழிஞ்ச கூட்டத்தை விலக்கிட்டுத்தான் நான் மேடையேற முடிஞ்சது. ஒரு கட்டத்துல, மியூஸிக் அகாதமியோட முன் பக்க கேட்டையே அடைச்சுட்டாங்க. மேடையிலேயே ஐந்து நிமிஷம் கண்ணை மூடி தியானம் பண்ணிட்டுத்தான் கச்சேரியை ஆரம்பிச்சேன்.

**அடிக்கடி ஹம் செய்யும் பாடல்..?**

'மாலைப் பொழுதின் மயக்கத்திலே கனவு கண்டேன் தோழி...' (பாடிக் காட்டுகிறார்). 'காற்றின் மொழி புதிதா...'னு மூடுக்குத் தகுந்தபோல நிறையப் பாடல்கள்...

**நீங்க ஆரம்பிச்சிருக்கற 'சமுதாயா' ஃபவுண்டேஷன் பற்றி..?**

நமக்கு நல்லது செய்த சமுதாயத்துக்கு, நாம ஏதாவது திருப்பிப் பண்ணணும்னு நினைச்சதோட விளைவுதான் -சமுதாயா ஃபவுண்டேஷன். 1999-ல இருந்து 2006-ம் ஆண்டு வரைக்கும் ரூ.55 லட்சம் மதிப்புள்ள நலத் திட்ட உதவிகளை வழங்கியிருக்கறோம். ஏழைக் குழந்தைகள் 35 பேருக்கு இலவச இதய அறுவை சிகிச்சை செய்ய நிதி உதவி செய்திருக்கறோம். மூளை வளர்ச்சியில்லாத ஏழைக் குழந்தைகள் நல்வாழ்வுக்கு உதவியிருக்கறோம். தவிர, சமூகத்தில சாதனைகள் படைச்சிட்டு இருக்கறவங்களுக்கு விருதுகள் வழங்குகிறோம். இன்போஸிஸ் சுதா மூர்த்தி, சிறுமி லாவிண்யாஸ்ரீ போன்றவங்க இந்த விருதைப் பெற்றிருக்கறாங்க.

**நிறைவேறாத ஆசைகள் ஏதாவது..?**

நிறைவேறக்கூடிய ஆசைதான் நிறைய இருக்குது. இசையால நோய் தீர்க்க முடியுங்கறதப் பற்றி ஆராய்ச்சி செய்து டாக்டரேட் வாங்கணும்னு ஆசையிருக்கு. சங்கீதத்தைப் பற்றி நிறைய புத்தகங்கள் எழுத விருப்பமிருக்கு.

ஜி.மீனாட்சி

மன அழுத்தம், கோபதாபங்களைக் குறைக்க சிரிப்பு உதவுது. இறுகின முக தசைகளை தளர்த்தவும், மனசை சுத்தமா வச்சுக்கவும் சிரிப்பு நல்ல ஆயுதம். ஆனால், என் சிரிப்புல எப்பவும் பொய்மை இருந்ததில்லை.